# ஹஜ்ரத் அய்யூப் (அ)

ஹஜ்ரத் அய்யூப் (அ) அவர்கள் திருக்ஃகுர்ஆனில் கூறப்பட்டுள்ளது போன்று ஹஜ்ரத் இப்ராஹீம் (அ) அவர்களுடைய வழித்தோன்றல்களில் வருபவர்:

وَمِن ذُرِّيَّتِهِۦ دَاوُۥدَ وَسُلَيْمَٰنَ وَأَيُّوبَ وَيُوسُفَ وَمُوسَىٰ وَهَٰرُونَ ۚ وَكَذَٰلِكَ نَجْزِى ٱلْمُحْسِنِينَ ﴿٨٤﴾

*பொருள்: மேலும், இப்ராஹீமுடைய வழித்தோன்றலைச் சேர்ந்த தாவூத், சுலைமான், அய்யூப், யூசுஃப், மூசா, ஹாரூன் ஆகியோருக்கும் (நேர்வழி காட்டினோம்). (அல் அன்ஃஆம்:84)*

ஹஜ்ரத் அய்யூப் (அ) அவர்கள் தன்னுடைய பொறுமையைக் கடைபிடிக்கும் சிறப்புமிக்கப் பண்பின் காரணமாகப் பிரபலமடைந்தவர்கள். அல்லாஹ் தஆலா அவர்களுக்கு எல்லையில்லா செல்வச்செழிப்பினை அளித்திருந்தான். எண்ணற்ற கால்நடைகளும் அடிமைகளும் அவரிடத்தில் இருந்தன. அவர்களு டைய ஒரு ஸாலிஹான பண்புடைய மனைவி இருந்தார்கள், அவர்களுக்கு அல்லாஹ் பிள்ளைச் செல்வங்களைம் அளித்திருந்தான். ஆனால், அல்லாஹ் தஅலா அவர்களை எவ்வாறு சோதித்தான் என்றால், அவர்களுடைய செல் வம்அனைத்துமே தீர்ந்துவிட்டது, அவர்களிடமிருந்த கால்நைடைகள் அனைத் துமே பறியோயின, அடிமைகளும் குழந்தைகளும் பறியோயினர். இது மட்டு மல்ல, அவர்களுக்கு எப்படிப்பட்ட நோய் தாக்கியது என்றால் அவர்களு டைய உடல் முழுவதும் நோயினால் பாதிக்கப்பட்டுவிட்டது. இருப்பினும், இந்த பிரச்சினைகள் இன்னல்கள் அனைத்திற்குமிடையில் அவர்கள் மன உறுதியுடன் இருந்தார்கள், எந்நிலையிலும் பொறுமையைக்கடைபிடித்தும் சகிப்புத்தன்மையுடனும் இருந்தார்கள். எந்த அளவிற்கு அவர்களுக்கு இன்னல் களைச் சந்திக்க நேரிடுமோ அந்த அளவிற்கு அவர்கள் கூடுதலான பொறுமை யினையும் கடைபிடிப்பார்கள். ஒரு காலக்கட்டம்வரை அவர்கள் இன்னல்கள் மற்றும் கஷ்டங்களுக்கு ஆளாகிக்கொண்டே இருந்தார்கள், இருப்பினும், ஒரு கணமும் அவர்களுடைய நாவினால் இதனைப்பற்றி முறையிட்டதில்லை. அவர்கள் எல்லா நிலைகளிலும் அல்லாஹ்வுக்காகப் பொறுமையினைக் கடைபிடிப்பவராகவும் அவனுக்கு நன்றி செலுத்தும் அடியானாகவும் இருந் தார்கள்.

இறுதியில், அவர்கள் அல்லாஹ் தஆலாவைக் கீழ்க்காணும் வசனத்தில் கூறப்பட்டுள்ளதுபோன்று அல்லாஹ்விடம் துஆ செய்கின்றார்கள்:

وَأَيُّوبَ إِذۡ نَادَىٰ رَبَّهُۥٓ أَنِّي مَسَّنِيَ ٱلضُّرُّ وَأَنتَ أَرۡحَمُ ٱلرَّٰحِمِينَ ﴿٨٣﴾

*பொருள்: இவற்றையே (விவேகம், நுண்ணறிவு மற்றும் ஞானம் ஆகிய அருட்பேறுகளை) நாம் அய்யூபுக்கும் வழங்கியிருந்தோம். அவர் தம்முடைய இறைவனிடம் இறைஞ்சியதை நினைவு கூரும், என்னை நோய் பிடித்து விட்டது, நீயோ கிருபை செய்வோரில் எல்லாம் பெரும் கிருபையாளனாய் இருக்கின்றாய் (அல் அன்பியா:83)*

*அல்லாஹ் தஅலா அவர்களுடைய துஆவை ஏற்றுக்கொள்கிறான், அதன்பின் அவர்களுக்குக் கட்டளையிடுகின்றான், நீங்கள் உங்களுடைய காலைத் தரையின்மீது தட்டுங்கள். அவர்கள் அவ்வாறு செய்தபோது அங்கிருந்து தண்ணீரின் ஒரு ஊற்று பீரிட்டு ஓடியது. அவர்கள் அதில் குளித்தார்கள். இதன் காரணமாக அல்லாஹ்வின் கட்டளையால் அவர்களுடைய நோய்களிலிருந்து குணமடைந்ததுமட்டுமின்றி அவர்கள் வாலிபராகவும் அழகுமிக்கவராகவும் ஆகிவிட்டடார்கள். திருக்ஃகுர்ஆன் இதனைப்பற்றி இவ்வாறு கூறுகின்றது:*

فَٱسۡتَجَبۡنَا لَهُۥ فَكَشَفۡنَا مَا بِهِۦ مِن ضُرّٖ ﴿٨٤﴾

*பொருள்: நாம் அவருடைய இறைஞ்சுதலை ஏற்று அவருக்கிருந்த நோவினைப் போக்கிவிட்டோம் (அல் அன்பியா:84)*

*அல்லாஹ் தஅலா அவர்களை மீண்டும் எவ்வாறு மாற்றிவிட்டான் என்றால் அவர்களுடைய மனைவியே திகைத்துப்போனார்கள். அல்லாஹ் தஅலா அவர்களுக்கு ஆரோக்கியம் மற்றும் வாலிபம் மட்டுமல்ல, அவர்களை முன்பைவிடவும் பெரிய செல்வந்தராகவும் மனைவி மக்களையுடையவராகவும் ஆக்கிவிட்டான். அல்லாஹ் தஅலா கூறுகின்றான்:*

وَءَاتَيۡنَٰهُ أَهۡلَهُۥ وَمِثۡلَهُم مَّعَهُمۡ رَحۡمَةٗ مِّنۡ عِندِنَا ﴿٨٤﴾

*பொருள்: அவருக்கு நாம் அவருடைய குடும்பத்தை மட்டும் வழங்கவில்லை, அவருடன் அதே அளவிற்கு இன்னும் அதிகமானவர்களையும் வழங்கினோம். இது நம்முடைய சிறப்பான கிருபையாகவும் (அடிபணிந்து வணங்குவோருக்கு ஒரு நினைவூட்டுதலாகவும் அமைவதற்காக). (அல் அன்பியா:84)*

ஹஜ்ரத் அய்யூப் (அ) அவர்கள் அல்லாஹ் தஆலா செல்வ செழிப்பு மற்றும் நோய்களின் மூலம் சோதனைக்குள்ளாகும் ஒவ்வொரு முஃமினானவருக்கும் பொறுமையையும் சகித்துக்கொள்ளும் வகையிலுமான ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகவும் சீரான முன்மாதிரியாகவும் இருக்கின்றார்கள்.

*இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:*

**بَيْنَا ايُّوْبُ يَغْتَسِلُ عُرْيَاناً، فَخَرَّ عَلَيْهِ جَرادٌ مِنْ ذَهَبٍ، فَجَعَلَ ايُّوْبُ يَحْتَثِيْ فِي ثَوْبِهِ، فَنَادَاهُ رَبُّهُ : يَا ايُّوْبُ، أَلَمْ أَكُنْ أَغْنَيْتُكَ عَمَّا تَرَى؟ قَالَ: بَلَى وَعِزَّتِكَ، وَلَكِنْ لاَ غِنَى بِي عَنْ بَرَكَتِكَ**

*பொருள்: ஹஜ்ரத் அய்யூப் (ஆ) அவர்கள் ஆடைகளில்லாது குளித்துக்கொண் டிருந்தார்கள், அவர்கள்மீது வெட்டுக்கிளிகள் வந்து விழுந்தன, இவை பொன் னால் ஆனவையாக இருந்தன. ஹஜ்ரத் அய்யூப் (ஆ) அவர்கள் அவற்றைப் பிடித்துக்கொள்ள முற்பட்டார்கள். அல்லாஹ் தஆலா ஹஜ்ரத் அய்யூப் (ஆ) அவர்களிடம் கேட்டான், அய்யூபே, நான் உம்மை இவற்றின் தேவையில் லாதவராக ஆக்கவில்லையா? அதற்கு ஹஜ்ரத் அய்யூப் (ஆ) அவர்கள் கூறி னார்கள், அல்லாஹ்வே, நிச்சயமாக ஆக்கியிருக்கின்றாய், ஆனால், நான் உன் னுடைய அருட்கொடைகளிலிருந்து தேவையற்றவனாக ஆகிவிடமுடியாது (புக்ஹாரி)*

* * *